(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 5(4).]

# பாராளுமன்றம்

## 5 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2012 பெப்புருவரி 24, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2012 மார்ச்சு 06, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் கடற்றொழில், நீர்வாழுயிரின வளங்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 மே மாதம் 15 ஆந் திகதிய 1601/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2010 ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதிய 1677/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சுற்றாடல் அமைச்சர்,— கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் 40 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 51 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரவையின் பணிப்புக்கிணங்க சுற்றாடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 யூன் மாதம் 07 ஆம் திகதிய 1709/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.02.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2012 ஏப்பிரல் 03, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1167/ ' 11

கௌரவ அனுர திஸாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் ஐ.ஓ.சீ. (IOC) எனும் இந்தியக் கம்பனிக்கு வரி விடுப்பு அடிப்படையில் 100 எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) மேற்படி எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டுமா;

(iii) ஆமெனில், 2006, 2007, 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வரியின் பெறுமதி தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எரிபொருள் நிரப்பும் நிலையங்களினால் செலுத்தத் தவறிய வரியை அரசாங்கத்திற்குச் செலுத்துமாறு இலங்கை முதலீட்டுச் சபை ஐ.ஓ.சீ கம்பனிக்கு அறிவித்துள்ளதா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது;

(iii) அக்கம்பனி வரி செலுத்த வேண்டியதில்லையென முதலீட்டுச் சபையின் தவிசாளராலேயே சம்பந்தப்பட்ட கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அத்திகதி யாது;

(v) அத்தகைய அறிவித்தல் வழங்கியமைக்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஐ.ஓ.சீ. கம்பனி அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்த தவறியமைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1549/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009ஆம் ஆண்டுக்குப் பின்பு ஏ-9 வீதியின் புனர்நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட திகதியையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்ட திகதியையும்;

(iii) மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவினம் மற்றும் கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டபொழுது உண்மையில் ஏற்பட்ட செலவினம் ஆகியவற்றையும்;

(iv) ஊழியம் தொடர்பான செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஏ-9 வீதி புனர்நிர்மாணக் கருத்திட்டத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்ட வெளிநாட்டுத் தொழிலாளர்கள் மற்றும் உள்நாட்டு தொழிலாளர்களின் எண்ணிக்கையை தனித்தனியாகவும்;

(ii) வெளிநாட்டுத் தொழிலாளர்களை இலங்கைக்குக் கொண்டு வந்த நாடு அல்லது கம்பனி அவர்களுக்கு வழங்கிய பதவிப் பெயர்களையும்;

(iii) ஏ-9 வீதி புனர்நிர்மாணக் கருத்திட்டத்தின் பணியாளர்கள் சார்பாக செலுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களின் பெறுமானங்களையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1588/ '11

கௌரவ புத்திக பத்திரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) களுத்துறை மாவட்டத்தின் அகலவத்த பிரதேசத்தில் அமைந்துள்ள பதுரலிய மத்திய பேல் க்ரெப் இறப்பர் தொழிற்சாலை சுமார் இருபது வருடங்களாக மூடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தொழிற்சாலையின் வளங்கள் அழிவடைவதற்கு அனுமதிப்பது தேசிய அளவிலானதொரு இழப்பாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி க்ரெப் இறப்பர் தொழிற்சாலையைத் திறக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) இன்றேல், குறித்த தொழிற்சாலையை பெருந்தோட்டக் கைத்தொழில் துறையில் பயனுள்ள வேறொரு நடவடிக்கைக்காக பயன்படுத்தும் திட்டமொன்று உள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1612/ '11

கௌரவ ஈ.சரவணபவன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) யாழ்ப்பாண மாநகர சபையின் நகரபிதா, சபையின் அனுமதியின்றி தான்தோன்றித்தனமான முடிவுகளை எடுத்து, யாழ்ப்பாண நகரின் சதுப்பு நிலப் பகுதியொன்றில், நான்கு மாடிகளைக் கொண்ட வர்த்தகக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு தனியார் வர்த்தகரொருவருக்கு அனுமதி வழங்கியுள்ளார் என்பதையும்;

(ii) யாழ்ப்பாணத்தின் முன்னாள் நகரபிதாவான காலஞ்சென்ற திரு. ரவிராஜ், மேற்படி சதுப்பு நிலப் பகுதியில் மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக முன்வைத்த பிரேரணையை, மண் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சாத்தியக்கூறு அறிக்கையின் விதப்புரைகள் காரணமாக செயற்படுத்தவில்லை என்பதையும்;

(iii) எந்தவிதமான மண் பரிசோதனையும் மேற்கொள்ளப்படாது, மேற்படி சதுப்பு நிலத்தில், தற்போது நான்கு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படுகின்றது என்பதையும்;

(iv) மேற்படி நிர்மாணிப்பு, பிற்காலத்தில் உயிர் மற்றும் சொத்திழப்புகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமையலாம் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும் முன்னதாக, இதை நிர்மாணிப்பவர் சில வர்த்தக நிலையங்களை விற்பனை செய்துள்ளார் என்பதையும்;

(ii) இதில், ரூபா 19,000,000 க்கு விற்பனை செய்யப்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு ரூபா 11,000,000க்கு மாத்திரம் உறுதிகளை எழுதி, முற்பணமாக ரூ. 50,000 வீதம் பெறப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இதன்மூலம், மாநகர சபைக்கு வருமான இழப்பும் வருமான வரி மோசடியும் நடைபெற்றுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற்கூறப்பட்ட நிலைமையைத் தடுப்பதற்காக ஆரம்பகட்ட விசாரணையை நடத்தி, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1714/ '11

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை துறைமுக அதிகார சபையின் பணியாளர்களை ஓய்வுபெறச்செய்யும் திட்டமொன்று துறைமுக அதிகார சபையின் 03/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் வெளியிடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகார சபையில் குறைந்தபட்சம் பத்தாண்டு கால சேவையைப் பூர்த்திசெய்துள்ளதும், எதிர்காலத்தில் ஐந்தாண்டு காலம் சேவையாற்றவிருக்கின்றதுமான பணியாளர்களுக்கு இருபது இலட்சம் ரூபா உச்சவரம்பின் கீழ் ஏற்புடைய இழப்பீட்டுத் தொகையைப் பெற முடியும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இலங்கை துறைமுக அதிகார சபையினால் கொழும்புத் துறைமுகத்தின் விஸ்தரிப்பு, அம்பாந்தோட்டை புதிய துறைமுக நிர்மாணிப்பு மற்றும் ஏனைய துறைமுகங்களை விருத்திசெய்யும் பணிகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் துறைமுக அதிகார சபையின் பணியாளர்களை ஓய்வுபெறச்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதன் அடிப்படை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) கடந்த காலத்தில் அரசியல் நிர்ப்பந்தங்களின் மீது மேற்கொள்ளப்பட்ட அத்தியாவசியமல்லாத ஆட்சேர்ப்புகள் காரணமாக துறைமுக அதிகார சபையில் ஊழியர் மிகை ஏற்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1726/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹிங்குரான சீனித் தொழிற்சாலைக்கு சொந்தமான காணியின் பரப்பளவு யாது;

(ii) அந்நிறுவனத்திற்குச் சொந்தமான ஏனைய ஆதனங்கள் யாவை;

(iii) அந்த ஆதனங்களின் அளவுகள் யாவை;

(iv) தற்போது ஹிங்குரான சீனித் தொழிற்சாலையைச் சார்ந்த வகையில் கரும்பு பயிர் செய்யப்பட்டுள்ள காணியின் பரப்பளவு யாது;

(v) மேற்படி பயிர் செய்யப்பட்ட காணிகளில் நிறுவனத்தினால் பயிர் செய்யப்பட்ட மற்றும் விவசாயிகளால் பயிர் செய்யப்பட்ட அளவுகள் தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பயிர் செய்யப்பட்ட கரும்புகளை மேற்படி தொழிற்சாலை கொள்வனவு செய்கின்றதா;

(ii) ஆமெனில், ஒரு தொன் கரும்பின் விலை யாது;

(iii) தொழிற்சாலையினால் கொள்வனவு செய்யப்படாவிடின் தொழிற்சாலையினதும் விவசாயிகளினதும் கரும்பினைக் கொள்வனவு செய்யும் நிறுவனம் யாது;

(iv) அந்நிறுவனம் ஒரு தொன் கரும்புக்காக செலுத்துகின்ற விலை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஹிங்குரான சீனி உற்பத்தி நிறுவனத்தில் கரும்பு பிழிவதற்கும் சீனி உற்பத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றதா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1865/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக்கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் கொரியா அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்குவதற்கு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ள தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை யாது;

(ii) இது தொடர்பாக கொரியாவிலிருந்து இலங்கைக்கு வரவழைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாது;

(iii) முதலாம் கட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாது;

(iv) வரவழைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை விண்ணப்பதாரர்களுக்கு வழங்குவதற்கு போதியதாக இருந்தனவா;

(v) இன்றேல், மீண்டும் கொரியாவிலிருந்து விண்ணப்பங்கள் இந்நாட்டுக்கு வரவழைக்கப்பட்டதா;

(vi) மேலதிக விண்ணப்பங்கள் இந்நாட்டில் அச்சிடப்பட்டிருப்பின் அவற்றை அச்சிட்ட நிறுவனம் யாது;

(vii) இந்நிறுவனம் அரச நிறுவனமாக இல்லாவிடின் அதன் உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கொரியாவின் தொழில் வாய்ப்புக்களுக்கு ஆட்சேர்க்கும் நடைமுறை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2006/ '11

கௌரவ அஜித் பி. பெரேரா,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) களுத்துறை மாவட்டத்தில் களுகங்கையைச் சூழவுள்ள பிரதேசங்களில் வெள்ளம் காரணமாக ஏற்படுகின்ற அனர்த்தங்களை முகாமைத்துவம் செய்யும் பொருட்டு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள,

(i) குறுகியகால நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) நீண்டகால நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2027/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— சிறுவர் அபிவிருத்தி மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்டபதற்கு,— (1)

(அ) (i) தற்போது முறைசாரா மற்றும் தவறான வழிகளில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் வீட்டுப் பணிகள் , சிறு பிள்ளைகளைப் பேணல், மற்றும் வீட்டுத் தோட்டப் பராமரிப்பு ஆகிய தொழில்களில் ஈடுபடுத்தப்படுவதையும்;

(ii) இவ்வாறு பணியில் ஈடுபடும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் பெரும்பாலும் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) மேற்கூறியவாறு சிறுவர்கள், மற்றும் பெண்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாவதை ஒழிக்கும் பொருட்டும், ஊழியர்கள் மற்றும் தொழில் வழங்குனர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் நன்மையாக அமையும் பொருட்டும், மேற்கூறிய தொழில்களை எதிர்பார்ப்பவர்களை பதிவு செய்யக்கூடியவாறான முறைசார்ந்த முறையியலொன்றுடன் கூடிய நிறுவனமொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) தாபிக்கப்படும் அவ்வாறான நிறுவனமொன்றில் பதிவு செய்யப்பட்டவர் களுக்கு மாத்திரம் மேலே (அ) i இல் குறிப்பிட்டவாறான தொழில்களை முறைசார்ந்த விதத்தில் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2032/ '11

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2600வது ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு "பின்பர லங்கா" பௌத்த கண்காட்சி ஒன்றும் அதற்கு சமாந்திரமாக பௌத்த ஆக்கங்கள் போட்டியொன்றும் நடாத்தப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதனுடன் தொடர்புடையதாக செலவிடப்பட்ட அரச நிதியத் தொகை எவ்வளவு;

(ii) இப்பணம் செலவிடப்பட்ட விதம் தொடர்பான விபரமான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

(iii) மேலே (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு தனியார்துறையின் உதவிகள் பெறப்பட்டுள்ளனவா;

(v) அவ்வாறெனின்அந்த உதவிகள் பெறப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அந்த நிறுவனங்களிலிருந்து கிடைத்த உதவித் தொகைகள் வெவ்வேறாக யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2084/ '11

கௌரவ ஆர்.எம். ரஞ்சித் மத்தும பண்டார,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில், புத்தள பிரதேச செயலாளர் பிரிவில், "சத்தாதிஸ்ஸ வாவி" திட்டத்தின் கீழ் காணிக் கச்சேரியொன்று நடாத்தப்பட்டு காணிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதன் போது 54 பேருக்கு தலா 1½ ஏக்கர் காணியும் 275 பேருக்கு தலா ஒரு ஏக்கர் காணியும் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) தலா 1½ ஏக்கர் காணி வழங்கப்பட்ட 54 பேருக்கும் மேற்படி திட்டத்திலுள்ள மிகச் சிறந்த காணித்துண்டுகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) இதன் காரணமாக தலா ஒரு ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்ட 275 பேரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பதையும்;

(v) மேற்படி காணிக் கச்சேரி மூலம் காணிகளை வழங்கும்போது அலுவலர்கள் பக்கச்சார்பாக செயற்பட்டுள்ளார்கள் என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி அநீதி இழைக்கப்பட்டுள்ள 275 பேருக்கும் சம உரிமைகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) தவறான விதத்தில் செயற்பட்டுள்ள அலுவலர்களுக்கு தண்டனை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2098/ '11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு தெற்கு பிரதேசத்தில் அமைந்துள்ள மருதமுனை கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு கல்வி ஒளியை பெற்றுக்கொடுக்கும் அல் - மனார் மத்திய மகாவித்தியாலயம் நூற்றாண்டை பூர்த்திசெய்துள்ளது என்பதையும்;

(ii) இப்பாடசாலை வருடாந்தம் கல்விப் பெறுபேறுகள் மற்றும் கலை, கலாசாரம், விளையாட்டுத் துறை ஆகியவற்றில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஒரு நூற்றாண்டு காலமாக இப்பாடசாலையினால் ஆற்றப்பட்டுள்ள சிறந்த கல்விச் சேவையினையும் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கையையும் கருத்திற்கொண்டு மேற்படி பாடசாலையை தேசிய பாடசாலையாக தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2099/ '11

கௌரவ கயந்த கருணாத்திலக்க,— பிரதம அமைச்சரும், பௌத்தசாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாதுகாப்புப் படையில் கடமையாற்றுகின்ற இராணுவ வீரர்களுக்கு, அவர்களின் மூன்றாவது குழந்தை கிடைக்கின்ற போது ரூபா ஒரு இலட்சம் கொடுப்பனவை வழங்குவதாக 2011 ஆம் ஆண்டு வரவு செலவுதிட்டத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட பிரேரணையை நடைமுறைப்படுத்தும் முறையியல் யாதென்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவு வழங்கப்படும் பாதுகாப்புப் படையின் பதவிகள் யாதென்பதையும்;

(iii) இதனைப் பெற்றுக்கொடுக்கும் போது முனைப்புச் சேவை கருத்திற் கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2100/ '11

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுகாராதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களுக்காக துறைமுகத்திற்குச் செலுத்தப்பட்ட தாமதக் கட்டணத் தொகை மற்றும் செலுத்தப்பட்ட தரப்பு யாதென்பதையும்;

(ii) 2006, 2007, 2008 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் மேற்படி இறக்குமதிகளுடன் தொடர்புடையதாக அரச மருந்தகக் கூட்டுத்தானம் செலுத்தியுள்ள தாமதக் கட்டணங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2008 ஆம் ஆண்டு இனங்காணப்பட்ட பழுதடைந்த , காலாவதியான மற்றும் தரத்தில் குறைந்த மருந்துகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தரத்தில் குறைந்த மருந்து வழங்குநர்களிடமிருந்து அறவிடப்படவேண்டியுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பணத் தொகை அறவிடப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) 2008 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள் தரத்தில் குறைந்தவையென வெளிப்படுத்தப்பட்ட போதிலும் கேள்விப்பத்திரச் சபையானது மீளக் கொள்வனவு செய்கின்றபோது இதனைக் கவனத்திற்கொள்ளாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சபியுரொக்ஷிம் சோடியம் (Cefuroxime Sodium) 750 மில்லிகிராம் 250,000 அலகு தடுப்பூசி மருந்துகள், 2009 ஆம் ஆண்டு ஆய்வுகூட பரிசோதனையின்றி கொள்வனவு செய்யப்பட்ட கட்டுத்துணி மற்றும் உரிய நிறையின்றி அமொக்சிலின் நுண்ணுயிர்கொல்லி வில்லைகள் 250 மில்லிகிராம் 6783 அலகுகள் ஆகியவற்றை மருந்தகக் கூட்டுத்தானம் கொள்வனவு செய்த வேளையில் ஏற்பட்ட நட்டம் யாதென்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2110/ '11

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள வர்த்தக வங்கிகளில் ஊழியர் சேமலாப நிதியம் வைப்பிலிட்டுள்ள பங்குகளின் பெறுமதியை வங்கி வாரியாகவும்;

(ii) பங்குகளின் ஒவ்வொரு தொகுதியையும் கொள்வனவு செய்த திகதிகளை கம்பனி வாரியாகவும்;

(iii) அத்தகைய பங்குகள் யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன என்பதை கம்பனி வாரியாகவும்;

(iv) பங்கின் ஒவ்வொரு தொகுதியையும் கொள்வனவு செய்த பெறுமதியையும்;

(v) இத்தகைய ஏதாவது பங்குகள் பின்னர் விற்கப்பட்டிருப்பின், அவைகள் விற்கப்பட்ட விலையையும் அவை யாருக்கு விற்கப்பட்டன என்பதையும்;

(vi) பங்குகள் வைப்புச் செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு வங்கியினதும் பணிப்பாளர்கள் சபைகளுக்கு அரசாங்கத்தின் மற்றும் / அல்லது ஊழியர் சேமலாப நிதியத்தின் பெயர் நியமனம் செய்யப்பட்டவர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் கல்வித்தகைமைகளையும்

அவர் இச்சபைக்குத் தனித்தனியாகத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2012 ஏப்பிரல் 04, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1550/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆண்டிற்குப் பின்னர் சீனாவால் இலங்கைப் புகையிரதப் பாதை விஸ்தரிப்புக் கருத்திட்டம் பொறுப்பேற்கப்பட்ட திகதியையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்ட திகதியையும்;

(iii) மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவினம் மற்றும் கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டபொழுது ஏற்பட்ட உண்மையான செலவினம் ஆகியவற்றையும்;

(iv) இக்கருத்திட்டத்தின் ஊழிய செலவினத்தையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இந்தப் புகையிரதப்பாதை விஸ்தரிப்புக் கருத்திட்டத்தில் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் உள்நாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை தனித்தனியாகவும்;

(ii) அந்தத் தொழிலாளர்களை இலங்கைக்குக் கொண்டு வந்த நாடு அல்லது கம்பனி அவர்களுக்கு வழங்கிய பதவிநிலைகள் என்ன என்பதையும்;

(iii) புகையிரதப்பாதை விஸ்தரிப்புக் கருத்திட்டத்தின் பணியாளர்கள் சார்பாக செலுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிகள் ஆகியவற்றின் பெறுமதிகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1589/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் நிக்கவெரட்டிய கல்விக் காரியாலயத்தால் நிருவகிக்கப்படும் குரு/நிக/மானபய கனிஷ்ட பாடசாலை மூடப்பட்டு பத்து ஆண்டுகளுக்கும் அதிக காலம் கடந்துள்ளது என்பதையும்;

(ii) தற்போது, மேற்படி பாடசாலைக்குச் சொந்தமாகவிருந்த அனைத்துக் கட்டடங்களும் சிதைவடைந்து வருகிறது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டடங்களைப் புனரமைத்து மீண்டும் பாடசாலையைத் திறப்பதற்கான தயார்நிலை காணப்படுகிறதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது திறக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) இப்பாடசாலை மீண்டும் திறக்கப்படாதிருப்பின், அதன் வளங்களை வேறொரு பொருளாதார தொழிற்பாட்டுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த உத்தேச தொழிற்பாடு யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1693/ '11

கௌரவ அனுர திஸாநாயக்க,— பிரதம அமைச்சரும் , பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'றக்னா லங்கா' பாதுகாப்புச் சேவையின் தலைவர் யார்;

(ii) 'றக்னா லங்கா' பாதுகாப்புச் சேவை மூலமாக ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பாதுகாப்பு வழங்கப்படுகின்ற வருடாந்த விலைகள் தனித்தனியாக யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iv) 'றக்னா லங்கா' பாதுகாப்புச் சேவையில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்காக சேவைபெறுநர்கள் செலுத்துகின்ற பணத்திலிருந்து 'றக்னா லங்கா' நிறுவனம் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்குச் செலுத்துகின்ற பணத் தொகை யாது;

(v) 'றக்னா லங்கா' நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற அனைவரும் அரச பாதுகாப்பு சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1803/ '11

கௌரவ ஆர். எம். ரஞ்ஜித் மத்தும பண்டார,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தனமல்வில பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தின், செவனகல பிரதேச செயலாளர் பிரிவில், இந்திகொலபெலெஸ்ஸ கிராம உத்தியோகத்தர் பிரிவின் கெமுனுபுர சுற்றுவட்ட வீதி "கெமுனு விவசாய அமைப்பினால்" மறுசீரமைக்கப்பட்டது என்பதையும்;

(ii) இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து மேற்படி விவசாய அமைப்பு கைச்சாத்திட்டுள்ள உடன்படிக்கைக்கு அமைய 419 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச் சீட்டின் மூலம், நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக ரூ. 801,089.99 பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி வீதியிலேயே 665 மீற்றர், இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபையின் உடன்படிக்கையின் கீழான வேலைகளுக்கென கெமுனு விவசாய அமைப்பினால் தனமல்வில பிரதேச சபையிடமிருந்து ரூ. 588,858.25 பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினால் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசீலனைகளுக்கு அமைய ஒரே பணிக்காக இரு நிறுவனங்களிடமிருந்து "கெமுனு விவசாய அமைப்பு" என்ற பெயரில் மோசடியான விதத்தில் நிதி பெறப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி மோசடி நடவடிக்கைக்கு பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1860/ '11

கௌரவ சிவசக்தி ஆனந்தன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வவுனியா கோவில்குளம் கிராமத்தில் பாலர் பாடசாலையொன்றுக்கான கட்டடமொன்றை நிர்மாணித்ததாக பொய்யான தகவல்களைத் தெரிவித்து, மேற்கொள்ளப்படாததொரு நிர்மாணிப்புக்கு வவுனியா நகர சபை ரூபா 177,180.66 பணத்தை மோசடியான முறையில் வழங்கியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) குறித்த பணத்தைப் பெற்றுக்கொண்டவர் யார் என்பதையும்;

(ii) மேற்படி மோசடியைப் புரிந்த நபரிடமிருந்து குறித்த பணத்தை மீள அறவிட நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவரா?

(இ) இன்றேல் ஏன்?

1862/ '11

கௌரவ வசந்த அலுவிஹாரே,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான தோட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) ஊழியர்களை ஆட்சேர்த்தல், நீக்குதல் மற்றும் சேவை நீடிப்பு வழங்குதல் தொடர்பான முழுமையான அதிகாரம் மேற்படி கம்பனியின் நிர்வாகத்துக்கு உள்ளதா என்பதையும்:

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி பெருந்தோட்டக் கம்பனியின் தற்போதைய தலைவர் பெருந்தோட்டத் துறையில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட ஒருவராவார் என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி ஊழல், மோசடிகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்விசாரணையின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) மேற்படி விசாரணையில் குறித்த தலைவர் குற்றவாளியாகுமிடத்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி தலைவர் சமர்ப்பிக்கின்ற எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் கணக்கு அறிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி கம்பனியின் 2007- 2010 ஆண்டுகளினுள் இலாபம் ஈட்டிய தோட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) நட்டம் ஏற்பட்டிருப்பின் அந்த நட்டம் எவ்வளவென்பதையும்;

(iii) ஊழல் மற்றும் முறைகேடுகள் அதற்குக் காரணமாயமைந்ததா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) (i) மேற்படி கம்பனியின் பொருட்டு 'கோப்' அறிக்கையொன்றின் சிபார்சுக்கமைய நடவடிக்கை அலுவலகமொன்று நிறுவப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அது நிறுவப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) அதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி அலுவலகத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

1866/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டளவில் அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடபப்படவேண்டியிருந்த கடன் தொகைகள் ஒவ்வொரு நிறுவனத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(ii) இக்கடன்களில் இதுவரை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்தப்பட்டுள்ள கடன் தொகைகள் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) தற்போது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடபப்படவேண்டியுள்ள கடன் தொகைகள் எவ்வளவு;

(iii) தற்போதுகூட கடனைச் செலுத்திவரும் நிறுவனங்கள் உள்ளனவா;

(iv) அவ்வாறாயின் அந்நிறுவனங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கடனைச்செலுத்தாத நிறுவனங்களிலிருந்து அவற்றை அறவிடுவதற்கான முறையியலொன்று அமைக்கப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறாயின் அது யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(இ) இன்றேல், ஏன்?

1872/ ’11

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கும் மிஹின் லங்கா விமான சேவைக்கும் சொந்தமான விமானங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி விமானங்களில், குத்தகை முறையில் பெறப்பட்டுள்ள விமானங்களின் எண்ணிக்கை விமான சேவையினடிப்படையில் வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி ஒவ்வொரு விமானத்துக்கும் மாதாந்தம் வழங்கப்படும் வாடகை வெவ்வேறாக யாது;

(iv) ஸ்ரீ லங்கன் விமான சேவை கடந்த மூன்று வருடங்களில் ஈட்டிய தேறிய வருமானம் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சரவை தீர்மானத்துக்கு அமைய, ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு எதிர்வரும் ஐந்து வருட காலப்பகுதிக்கும், மிஹின் லங்கா விமான சேவைக்கு எதிர்வரும் இரண்டு வருட காலப் பகுதிக்கும் கிடைக்கப்பெற்றுள்ள மூலதன முதலீட்டுப் பெறுமதி வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி மூலதன முதலீடுகளை இவ்விரு விமான சேவைகளினதும் மேம்பாட்டைக்கருதி ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அத்திட்டங்களை ஒவ்வொரு நிறுவனத்தினடிப்படையிலும் வெவ்வேறாக குறிப்பிடுவாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1912/ '11

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கொழும்பில் சேரிப்புறங்களில் வாழ்கின்ற மக்களது குடியிருப்புப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ரியல் எஸ்டேட் எக்ஸ்சேன்ஜ் (பிரைவேட்) லிமிடெட் (REEL) ஆனது நகர அபிவிருத்தி அதிகார சபை (UDA), ஸ்ரீ லங்கா வீதி அபிவிருத்திக் கம்பனி (SLRDC), தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை (NHDA), கொழும்பு மாநகர சபை (CMC) ஸ்திரமான நகராட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றுடன் கூட்டிணைக்கப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) 2006 முதல் இற்றை வரையில்,

(i) 'ரீல்' (REEL) இனது பணிப்பாளர்கள், தவிசாளர்கள், பிரதான கணக்கீட்டு அதிகாரிகள் யார் என்பதையும்;

(ii) திறைசேரி, அரச வங்கிகள், அல்லது அரச நிறுவனங்கள் ஆகியவற்றினால் 'ரீல்' இற்கு மாற்றம் செய்யப்பட்ட பணம் தொடர்பான விபரங்களையும்;

(iii) ஒவ்வொரு மாற்றத்தின் நோக்கம் எதிர்வு கூறப்பட்ட விளைவுகள், உண்மையில் கிடைத்த விளைவுகள் ஆகியனவற்றையும்;

(iv) ரூ. 5 மில்லியனுக்கு மேற்பட்ட செலவினங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் ஒவ்வொன்றையும் அங்கீகரித்தமைக்கான நோக்கம் ஆகியவற்றையும்

(v) 'ரீல்' (REEL) இன் தற்போதைய நிதி நிலைமை என்னவென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) 2010 சனவரி முதல் இற்றை வரை 'ரீல்' தொடர்பான ஏதாவது வீண்செலவுகள், மோசடிகள், மற்றும் அல்லது ஊழல்கள் பற்றிய ஏதாவது உள்ளக விசாரணைகள், கணக்காய்வுகள், அல்லது குற்றவியல் புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்;

(ii) ஆம் எனில் அவற்றின் விளைவுகளையும்;

(iii) மேற்படி (இ) (i) இல் கண்டறியப்பட்ட முறைகேடுகள் தொடர்பில் பிரேரிக்கப்பட்ட பரிகார நடவடிக்கைகளையும் அவை மேற்கொள்ளப்பட்ட திகதிகளையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2024/ '11

கௌரவ அஜித் பி. பெரேரா,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மில்லனிய பிரதேச செயலாளர் பிரிவின் வீதிகளுக்கு காப்பட் இடுவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2011 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகையைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ள வீதிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வீதியிலும் காப்பட் இடப்பட்டுள்ள தூரம் எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி காப்பட் இடுவதற்காக பயன்படுத்தப்பட்ட காப்பட் கலவை எத்தனை கியுப்களாகும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வீதிகளில் காப்பட் இடுவதை மேற்கொண்ட ஒப்பந்த கம்பனி அல்லது கம்பனிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கம்பனிக்கும் மேற்படி ஒப்பந்தங்களை கையளிப்பது தொடர்பாக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தகைய உடன்படிக்கைகளை சபாபீடத்தில் இடுவாரா என்பதையும்;

(iv) உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவில்லையாயின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி ஒப்பந்தங்களை கையளிக்கும் போது முறையான கேள்விப் பத்திர நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பதையும்;

(ii) இன்றேல், ஒப்பந்தங்களை கையளிப்பதற்காக பின்பற்றப்பட்ட முறையியல் யாது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களின்போது இடம்பெறத்தக்கதான முறைகேடுகளை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2066/ '11

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திரு. பஸ்தியாம்பிள்ளை ஜோசப் பீற்றருக்குச் சொந்தமான பீற்றர்ஸ் பண்ணை தச்சன்குளம், வவுனியாவில் உள்ள பத்து ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி (துண்டு இல. 797, காட்டப்பட்ட பட இலக்கம்: 7 SP 4739) வவுனியா விமான நிலைய விஸ்தரிப்புக்காக 1986 இல் சுவீகரிக்கப்பட்டது என்பதையும்;

(ii) 1986 இல் சுவீகரிக்கப்பட்ட காணிக்கான நட்டஈடு இன்னும் செலுத்தப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திரு.பஸ்தியாம்பிள்ளை காலம் சென்றுவிட்டதால் மேற்படி நட்டஈட்டை அவரின் மனைவிக்கும் மகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2085/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரிவின் வளவை திட்டத்திற்கு உரித்தான ரிதியகம வாவியின் கீழ் எத்தனை ஏக்கர் பயிர்ச்செய்கைக் காணிகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தேக்கத்தின் நீரை அம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்படுகின்ற துறைமுகம் உள்ளிட்ட அபிவிருத்தி வலயத்துக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், பெற்றுக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள நீரின் கொள்ளளவு எத்தனை ஏக்கர் அடிகள் என்பதையும்;

(iv) மேற்படி நீர் ரிதியகம நீர்த்தேக்கத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படுமாயின், குறித்த வாவியின் கீழ் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற விவசாயிகளின் பயிர்ச்செய்கைகளுக்கு நீர்ப்பற்றாக்குறை காரணமாக ஏற்படக்கூடிய சேதங்களை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நீர் வழங்களை பெற்றுக் கொடுப்பதற்காக ரிதியகம நீர்த்தேக்கத்துக்கு போதியளவு நீரைப் பெற்றுக் கொள்ளக்கூடிய மாற்று வழிமுறைகளை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(vi) அதற்கான திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) அதற்காக செலவாகும் பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2101/ '11

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு முதலாவது மாணவர் குழு சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி மாணவர் குழு தமது பட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டிய திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு மாணவர்களுக்கு அத்தியாவசியமான பேராசிரியர் அலகு தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

(iii) முதலாவது பேராசிரியர் பிணி ஆய்வுப் பயிற்சி இம்மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி பேராசிரியர் பிணி ஆய்வுப் பயிற்சிக்குத் தேவையான கட்டிடத்தின் நிர்மாணப்பணிகள் முடிவடைந்துள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், முடிவடைந்த திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பேராசிரியர் பிணி ஆய்வுப் பிரிவுக்குத் தேவையான தாதிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) தற்போது சுகாதார அமைச்சினால் மேற்படி அலகிற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள தாதிமார்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2111/ '11

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அரசாங்கத்திற்கும் அதன் ஏதாவது முகவர்களுக்கும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ சொந்தமான நிதி மற்றும்/ அல்லது நிதி முகாமைத்துவக் கம்பனிகளின் பெயர்களையும் ;

(ii) இந்த ஒவ்வொரு கம்பனிகளினதும் மூலதனத்தையும்;

(iii) இறுதியாகச் சான்றுப்படுத்தப்பட்ட சம்பந்தப்பட்ட ஐந்தொகையின் பிரதிபலிக்கின்றவாறு அக்கம்பனிகள் ஒவ்வொருன்றினதும் மொத்தச் சொத்துக்களையும்;

(iv) மேற்படி கம்பனிகளின் பல்வேறு வகையான பணிப்பாளர் சபைகளில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரதும் பெயர், பதவிகள் மற்றும் கல்வித் தகைமைகள் ஆகியவற்றையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

2145/ '11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஊவா மாகாண, வெலிமடை சில்மியாபுரயில் வசிக்கின்ற 500 குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு தற்போது விநியோகிக்கப்படுகின்ற நீரானது அவர்களது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு போதியதாக இல்லையென்பதை அவர் அறிவாரா?

(ஆ) போதியளவு நீரைப் பெறுதல் தொடர்பாக சில்மியாபுரயைச் சேர்ந்த குடும்பங்கள் எதிர்நோக்கும் சிரமங்களை இலகுபடுத்துதவதற்காக மேலே சொல்லப்பட்ட நீர்வழங்கலை மேம்படுத்துவதற்கு அவர் நடவடிக்கை மேற்கொள்வாரா?

(இ) இன்றேல், என்?

## 2012 ஏப்பிரல் 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0449/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வர்த்தக வங்கிகள் பற்றிய அரசாங்கத்தின் கொள்கை பற்றியும்;

(ii) தனியார் வங்கிகளில் அரசாங்கம் பங்குகளைக் கொள்வனவு செய்கின்றதா என்பது பற்றியும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இன்றுள்ளவாறாக, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ஊ.ந.பொ.நி) அல்லது வேறு ஏதேனும் அரச நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட தனியார் வங்கிகளின் பங்குக் கொள்வனவின் மொத்த அளவையும்;

(ii) ஒவ்வொரு வங்கியிலிருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளின் சதவீதத்தையும், செலுத்தப்பட்ட மொத்த கிரயத்தை, அத்தகைய கொள்வனவு மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வெவ்வேறாக ஆண்டுவாரியாகவும்;

(iii) பங்கு விலைகள் வீழ்ச்சியடைந்தால், பங்குக் கொள்வனவில் ஏற்படும் இடர்களை ஏற்பது யார் என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1115/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கல்வியில் தர ரீதியான ஒரு அபிவிருத்தியை உருவாக்குவதற்காக ஆசிரிய ஆலோசகர்கள் அளப்பரிய சேவை ஆற்றுகின்றார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆசிரிய ஆலோசகர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக பின்பற்றப்படும் நடைமுறைகள் யாவை என்பதையும்;

(ii) இவர்களுக்குரிய சலுகைகளும் கொடுப்பனவுகளும் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) சேவையில் திருப்திகரத்தன்மையை ஏற்படுத்தி ஆசிரிய ஆலோசகர்களிடமிருந்து மேலும் பயனுள்ள சேவையினை பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஆசிரிய ஆலோசகர் சேவையொன்றை தோற்றுவிப்பதற்கும்;

(ii) அதன் மூலம் இவர்களின் சேவையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும்

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1562/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச சேவைக்கு போட்டிப் பரீட்சைகளின்றி ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு ஆட்சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களை ஆட்சேர்க்கும்போது கவனத்திற்கொள்ளப்படுகின்ற குறைந்தபட்ச தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(அ) (i) அரச சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைகளில் தோற்றி ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ள ஆயிரக்கணக்கானோர் தற்போதுகூட தொழில் வாய்ப்புகளின்றி உள்ளபோது போட்டிப்பரீட்சைகள் நடத்தப்படாது மேலே குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புகளின் காரணமாக பரீட்சைகளுக்குத் தோற்றியவர்களுக்கு பெரும் அநீதி நேரிடுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றி சித்தியடைந்துள்ளவர்களுக்கு தொழில் வழங்குவதற்கான நீதியானதொரு வேலைத்திட்டத்தைத் தயாரிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1859/ '11

கௌரவ சிவசக்தி ஆனந்தன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வவுனியா நகர சபைக்குச் சொந்தமான மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி விற்பனை நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) பூந்தோட்டம், குருமன்காடு மற்றும் வவுனியா சந்தைக்கு அருகிலிருக்கும் மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களையும் குருமன்காடு மற்றும் வவுனியா சந்தைக்கு அருகிலிருக்கும் ஆட்டிறைச்சி விற்பனை நிலையங்களையும் குத்தகைக்கு வழங்கும்போது கேள்விப்பத்திரங்கள் கோரல் அல்லது பகிரங்க ஏலவிற்பனை நடத்தப்பட்டதா என்பதையும்;

(ii) 2009, 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் மேற்படி ஒவ்வொரு விற்பனை நிலையமும் குத்தகைக்கு வழங்கப்பட்ட தொகை மற்றும் குத்தகை பெற்ற தரப்பினர் வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2011.06.29ஆம் திகதி நடைபெற்ற நகரசபைக் கூட்டத்தின் அறிக்கைபடி வவுனியா சந்தைக்கு அருகில் அமைந்துள்ள மாட்டிறைச்சி விற்பனை நிலையம் திரு. எஸ். கே. காதர் என்பவருக்கு ரூபா 859,711.05 வுக்கும் ஆட்டிறைச்சி விற்பனை நிலையம் திரு. கே. கே. மஸ்தான் என்பவருக்கு ரூபா79,315.50 வுக்கும் கேள்விப் பத்திரங்கள் கோரப்படாமல் குறைந்த தொகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அதன் மூலம் சபைக்கு மேற்படி மூன்று வருடங்கள் தொடர்பிலும் சுமார் ரூபா ஒரு கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அவ்வாறாயின், அதற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களிடமிருந்து குறித்த பணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1978/ '11

கௌரவ ஆர்.எம். ரஞ்ஜித் மத்துமபண்டார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தின், புத்தள பிரதேச செயலாளர் பிரிவில், கல்டம்மண்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் டீ. எம். பியதாஸ, டீ.எம். குணதாஸ, ஆர்.எம். அமரதாஸ, ரீ.ஏ. சரத், எம்.பீ.குணபால, டீ.எம். ரத்னசிறி, டீ.எம். சரத், ஜே.எம். பிரேமலதா மற்றும் எச்.எம் குணசேகர ஆகியோர் சமுர்த்தி நிவாரணம் பெற்ற குறைந்த வருமானம் பெறுவோர்கள் என்பதையும்;

(ii) தற்போது இவர்களின் சமுர்த்தி நிவாரணம் நீக்கப்பட்டுள்ளதென்பதையும்:

அவர் அறிவாரா?

(ஆ) சமுர்த்தி நிவாரணத்தை இழந்துள்ளமையினால் மிகவும் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இவர்களுக்கு மீண்டும் சமுர்த்தி நிவாரணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1989/ '11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சாவகச்சேரி நகரசபை பிரதேசத்தில் அமைந்துள்ள 12 பாடசாலைக்குச் சொந்தமான மலசல கூடங்களின் கழிவுகளை அகற்றுவதற்கு சாவகச்சேரி நகரசபை தவறியுள்ளதென்பதையும்;

(ii) இந்நிலைமை தொடர்பாக சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் நிர்வாகத்தினர் நகரசபைக்கு அறிவித்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இப்பிரச்சினைக்குரிய நிலைமையை தீர்ப்பதற்காக சாவகச்சேரி நகரசபைக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி அப்பாடசாலைகளுக்கு நகரசபையினால் வழங்கக் கூடிய அனைத்து வளங்களையும் உரிய முறையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2025/ '11

கௌரவ அஜித் பி. பெரேரா,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ஆரம்ப பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்புப் பட்டத்திற்கு கற்பதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களல்லாத மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) ஆரம்ப பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு பட்டத்திற்கு கற்பதற்காக அனுமதிக்கப்பட்ட மேற்படி மாணவர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பல்கலைக்கழகம் மற்றும் பட்டப் பாடநெறிக்கு அமைவாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ஆரம்ப பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு பட்டத்திற்கு கற்பதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களல்லாத மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுகின்ற இலங்கையர்களல்லாத மாணவர்களுக்கு "தலைமைத்துவம் மற்றும் ஆளுமைவிருத்திப்" பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் மேற்படி மாணவர்களுக்கும் குறித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2057/ '11

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியினால் கடந்த இரண்டு வருடங்களாக கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பட்டியலிடப்பட்ட பங்குகளின் சகல கொள்வனவுகள் மற்றும் விற்பனையினையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் பொறுப்பான தரகர்களின் பெயர்களையும்;

(iii) தரகுக் கட்டணங்களை வெவ்வேறாகக் குறிப்பிட்டு ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கான செலவினையும்;

(iv) மேற்குறிப்பிட்ட 2 வருட காலப்பகுதியில் ஒவ்வொரு பங்குத் தரகர் கம்பனிக்கும் செலுத்தப்பட்ட தரகுக் கட்டணத்தினையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) மேலே (அ) (i) இல் தரப்பட்ட ஒவ்வொரு பங்குகளின் கொள்வனவு அல்லது விற்பனைக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய மற்றும் கொள்வனவு அல்லது விற்பனையிலிருந்து இரண்டு வாரங்களில் சந்தை நிறைவு பெறும் போதிருந்த விலையை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2087/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது நாட்டின் பௌத்த மத வழிபாட்டுத் தலங்களை பாதுகாப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) 2005 – 2010 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இச்செயற்பாடுகளுக்கென போதியளவு நிதி ஒதுக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(iii) மேற்படி காலப் பகுதியில் இதற்கென செலவிடப்பட்டுள்ள பணத் தொகைகள் வருடாந்த ரீதியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2102/ '11

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போதுள்ள பதிற் கடமை புரியும் பாடசாலை அதிபர்கள் நிரந்தர சேவையில் அமர்த்தப்படுவது சம்பந்தமாக, இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) பதிற் கடமை புரியும் பாடசாலை அதிபர்களாக இவர்கள் கடமையாற்றியுள்ள கால எல்லைக்காக இவர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிலுவைச் சம்பளம் செலுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) பதிற் கடமை புரியும் அதிபர்களுக்கு மத்தியில் பெண்கள் பிரதிநிதித்துவத்தின் விகிதாசாரம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2112/ '11

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மத்திய வங்கியில், ஊழியர் சேமலாப நிதியத்திற்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தரின் பெயர் மற்றும் பதவியையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தரின் கல்வித் தகைமைகளையும்;

(iii) மத்திய வங்கியில் அந்த உத்தியோகத்தரின் சேவைக் காலத்தையும்;

(iv) மத்திய வங்கியின் முதலீட்டுக் குழுவின் ஒவ்வொரு உறுப்பினர்களதும் பெயர், பதவி, மற்றும் கல்வித் தகைமைகளையும்;

(v) மத்திய வங்கியில் மேற்படி (iv) இல் சொல்லப்பட்ட ஒவ்வொரு உத்தியோகத்தர்களதும், சேவைக்காலம் ஆகியவற்றையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

1551/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு— (1)

(அ) (i) இந்திய உதவியுடன் 2010ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட இலங்கைப் புகையிரதப்பாதைகள் நவீனப்படுத்தல் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட திகதி ஆகியவற்றையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவினம் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட வேளையில் இறுதியான செலவினம் ஆகியவற்றையும்;

(iii) ஊழியத்துக்காக ஏற்பட்ட செலவினத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களின் எண்ணிக்கையை தனித்தனியாகவும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக தொழிலாளர்களை இலங்கைக்குக் கொண்டு வந்த கம்பனி அல்லது நாடு மேற்படி வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு வழங்கிய பதவிநிலைகளையும்;

(iii) இலங்கைப் புகையிரதப்பாதை நவீனப்படுத்தல் கருத்திட்டத்தின் பணியாளர்கள் சார்பாக செலுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஆகியவற்றின் பெறுமதிகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1590/ '11

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தின் புத்தளவில் இடம்பெற்ற தயட்ட கிருல கண்காட்சிக்கு சமாந்திரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கும்புக்கன, ஒக்கம்பிட்டிய, புத்தள மற்றும் செல்லக்கதிர்காமம் ஆகிய வீதிகள் காபட் இட்டு செப்பனிடப்பட்டது என்பதையும்;

(ii) குறித்த வீதிகளில் சில தற்போது அமிழ்ந்துபோயுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு வீதியையும் அபிவிருத்தி செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்;

(ii) அந்த நிதியை வழங்கிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதி அபிவிருத்திப் பணிகள் வழங்கப்பட்ட ஒப்பந்தக்காரர்/ ஒப்பந்தக்காரர்கள் யாவரென்பதையும்;

(ii) குறித்த பணிகளை மேற்பார்வை செய்த நிறுவனம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வீதியில் சேதமடைந்துள்ள இடங்களை சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர்களைக் கொண்டு மீண்டும் புனரமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1867/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2011.06.31 ஆம் திகதியளவில் பெற்றுக்கொண்டுள்ள நீண்ட கால மற்றும் குறுங்கால உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் வெவ்வேறாக எவ்வளவு;

(ii) 2007 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை ஒவ்வொரு கடன் வகைகளின் கீழ் பெற்றுக்கொண்டுள்ள கடன் தொகைகள் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) இக்கடன் தொகைகளைப் பெற்றுக்கொள்வதற்கான காரணங்கள் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக யாது;

(iv) ஒவ்வொரு கடனும் பெறப்பட்டுள்ள வட்டி வீதம் யாது;

(v) பெறப்பட்டுள்ள மேற்படி கடன்களில் இதுவரை செலுத்தப்பட்டுள்ள தொகைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்குஅறிவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2088/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது நாட்டில் கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க மத வழிபாட்டுத் தலங்களை பாதுகாப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) 2005 – 2010 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இச்செயற்பாடுகளுக்கென போதியளவு நிதி ஒதுக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(iii) மேற்படி காலப் பகுதியில் இதற்கென செலவிடப்பட்ட பணத் தொகைகள் வருடாந்த ரீதியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2012 ஏப்பிரல் 17, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0686/ '10

கௌரவ ரவி கருணநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2010 செப்டம்பர் 01ஆம் திகதியன்றுள்ளவாறு, இலங்கை அரசாங்கத்தின் தங்க ஒதுக்கத்தில் மத்திய வங்கியினால் ஏலமிடப்பட்ட தொகை யாதென்பதையும்,

(ii) மேற்படி ஏலத்தில் விடப்பட்ட தங்கத்தின் பெறுமதியை ஐ.அ.டொலர்களிலும் இலங்கை நாணயத்திலும் யாதென்பதையும்,

(iii) அரசாங்கத்தினால் தங்கம் என்ன விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டது என்பதையும்,

(iv) பறிமுதல் செய்யப்பட்ட தங்கம் ஏதேனும் இலங்கை மத்திய வங்கி ஒதுக்கத்தில் சேர்க்கப்பட்டதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த இரண்டு வருடங்களில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தங்கம் ஏதாவது விற்பனை செய்யப்ட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், தங்கத்தின் விற்பனை விலை எவ்வளவு என்பதையும்,

(iii) இத்தங்க விற்பனை விலைமனுக்கோரல் மூலமா அல்லது ஏலவிற்பனை மூலமா மேற்கொள்ளப்பட்டது என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1116/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஆசிரிய சேவையில் ஈடுபட்டிருக்கையில், அதிபர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி, சித்தியடைந்ததன் பின்னர், அதிபர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட அதிபர்கள், முன்னைய சேவையை விடக் குறைந்த சம்பளத்தைப் பெறுகிறார்கள் என்பதையும்;

(ii) மேற்படி காரணத்தினால் அவர்கள் மிகுந்த உள ரீதியான மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மிகுந்த அர்ப்பணிப்புடன் பாடசாலை முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இக்குழுவினரை இதற்கு முன்னர் ஆசிரிய சேவையில் பெற்ற சம்பள மட்டத்தை விட உயர்வான சம்பள மட்டத்தில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா?

(ii) தற்போது அதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா?

(iii) அவ்வாறின்றேல், அத்தகைய முறைமையொன்று உருவாக்கப்படும் கால எல்லை யாது?

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1563/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இற்றை வரை களணிதிஸ்ஸ இரட்டை மின் வலுநிலையத்தின் இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) நட்டம் ஏற்பட்டிருப்பின்,

(i) அதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நட்டத்தை தாங்கிக்கொள்பவர்கள் யாரென்பதையும்;

(iii) இதற்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் யாரென்பதையும்,

(iv) மேற்படி நட்டத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள நேரிட்டிருப்பின் அதற்கான நிவாரணம் மக்களுக்கு வழங்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1861/ '11

கௌரவ சிவசக்தி ஆனந்தன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) டெங்கு ஒழிப்பின் பொருட்டு வட மாகாண ஆளுநரினால் வவுனியா நகர சபைக்கு 2009 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அப்பணத் தொகை செலவிடப்பட்டமை தொடர்பான கணக்கு அறிக்கைகள் மற்றும் விபரங்கள் இதுவரை நகரசபைக்கு சமர்ப்பிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கணக்கு அறிக்கைகள் மற்றும் விபரங்களை நகரசபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2001/ '11

கௌரவ ஆர்.எம். ரஞ்சித் மத்துமபண்டார,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தள நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய பிரதேச சபைக் கட்டடிடத்தில் அமைந்துள்ள 17 விற்பனைக் கூடங்களில் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் மீன் விற்பனைக் கூடத்திற்காக ஒதுக்கப்பட்ட 11 ஆம் இலக்க விற்பனைக் கூடத்தைத் தவிர, இலக்கம் 4 தொடக்கம் இலக்கம் 17 வரையுள்ள விற்பனைக் கூடங்கள் அனைத்தும் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டு விற்பனைக் கூடமொன்று ரூபா 20 இலட்சம் வீதம் வழங்கப்பட்டதென்பதையும்;

(ii) 1,2,3 ஆம் இலக்க விற்பனைக் கூடங்கள் சபையின் எதிர்கால தேவைக்காகப் பயன்படுத்தும் பொருட்டு கேள்விப் பத்திரம் மூலம் வழங்காமலிருப்பதற்கு சபையின் மாதாந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதென்பதையும்;

(iii) பின்னர் மேற்படி மூன்று விற்பனைக் கூடங்களுக்காக தமது நண்பர்கள் சமர்ப்பித்த ஒரு விற்பனைக் கூடத்திற்கு ரூபா 10 இலட்சம் போன்றதொரு ஆகக்குறைந்த பெறுமதியைக் கொண்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனவென்பதையும்;

(iv) வெளிப்படைத்தன்மையின்றி மேற்கொள்ளப்பட்ட மேற்படி கேள்விப் பத்திரம் கோரலால் மேற்படி பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய பெருமளவு வருமானம் இழக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(v) மேற்படி மோசடியான கேள்விப் பத்திரம் கோரலின் ஊடாக பெருமளவு நிதி மோசடி இடம்பெற்றுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கேள்விப் பத்திரம் கோரல் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை ஒன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2089/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது நாட்டின் இந்து மத வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அரசாங்கத்தினால் மேற்கோள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) மேற்படி பணிகளுக்காக 2005 - 2010 ஆண்டுகளுக்கிடையிலான காலத்தினுள் செலவிடப்பட்ட பணத் தொகை ஆண்டுவாரியாக தனித்தனியாக எவ்வளவு;

(iii) மேற்படி ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகள் போதுமானவையா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2103/ '11

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய பாடசாலை விண்ணப்பதாரர்களில்

(i) அந்தப் பரீட்சையில் 8 பாடங்களிலும் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலங்களுக்கு ஏற்ப சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) கணிதம், தாய்மொழி, ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தியடையாத மணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

வருடாந்த ரீதியாக மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அரச பாடசாலைகளில் கணிதம், தாய்மொழி, ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களை கற்பிப்பதற்காக உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சிங்கள மொழியைத் தவிர ஆங்கில மொழி மூலத்தையும் பயன்படுத்தும் தேசிய மற்றும் மாகாண சபை பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் ஒவ்வொரு பாடத்தையும் கற்பிக்க இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

0691/ '10

கௌரவ ரவி கருணநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மத்திய வங்கி தாபிக்கப்பட்டதிலிருந்து இற்றைவரையில் இலங்கையில் வர்த்தக வங்கிகளை நிறுவுவதற்கு விநியோகிக்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கையையும்,

(ii) ஒவ்வொரு பிரதான வங்கியின் கீழும் இயங்கும் கிளைகளின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்,

(iii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள வங்கிகளின் செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனத்தையும்,

(iv) இன்றுள்ளவாறாக வர்த்தக வங்கிகளுக்குத் தேவைப்படும் பங்கு மூலதனத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குறிப்பிடப்பட்ட வங்கிகளுள், இலங்கையில் தலைமையகத்தைக் கொண்டுள்ள எவையேனும் வெளிநாட்டு வங்கியொன்றினை வாங்குவதற்கு பணத்தினை வைப்புச் செய்துள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அவ் வங்கியின் பெயரையும் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பணத்தின் பெறுமதியையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வர்த்தக வங்கியல்லாத வங்கிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையினையும்,

(ii) இலங்கையில் தற்போது இயங்கும் வர்த்தக வங்கியல்லாத வங்கிகளின் எண்ணிக்கையினையும்,

(iii) அவ்வங்கிகளின் பங்கு மூலதனத்தினையும்,

(iv) வர்த்தக வங்கி அல்லது வர்த்தக வங்கி அல்லாத வங்கி ஏதாவது வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறாயின், அவ்வங்கிகளின் பெயர்களையும் அவற்றின் பணிப்பாளர்களின் பெயர்களையும்

அவர் அறியத் தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1634/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கமநல சேவைகள் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் கித்தலகம மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குரிய பதுளு வயல்வெளியின் கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டுகள் உரிய முறையில் புனரமைக்கப்படாமையினால் சுமார் 150 ஏக்கர் வயற்காணிகள் தரிசு நிலங்களாக மாறியுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வயல்வெளிக்குச் சொந்தமான நீர்ப்பாசன முறைமையை துரிதமாக புனரமைப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பணிகள் நிறைவு செய்யப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1659/'11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011ஆம் ஆண்டளவில் இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் நிரந்தர, அமய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், பதவிகள், உரிய சம்பளங்கள் மற்றும் வழங்கப்படுகின்ற ஏனைய வசதிகள் யாவை என்பதையும்

அவர் தனித்தனியே குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஊழியர்களில் 2011 ஆம் ஆண்டில் மிகை ஊதியம் செலுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இவர்களின் பெயர்களும், பதவிகளும் யாவை என்பதையும்;

(iii) ஒவ்வொரு ஊழியருக்குமான மிகை ஊதியத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இதற்காக ஏற்கப்பட்ட மொத்த செலவு எவ்வளவு என்பதையும்;

(v) இதற்கான நிதி பெறப்பட்ட வழி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2090/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது நாட்டின் இஸ்லாம் மத வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அரசாங்கத்தினால் மேற்கோள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) மேற்படி பணிகளுக்காக 2005 – 2010 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தினுள் செலவிடப்பட்ட பணத்தொகை ஆண்டுவாரியாக தனித்தனியாக எவ்வளவு;

(iii) அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகள் போதுமானவையா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2105/ '11

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் பாடசாலை கல்வி முறையில் பிள்ளைகள் பலதரப்பட்ட தரங்களில் பாடசாலைகளை விட்டுச் செல்கின்றார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு பாடசாலைகளை விட்டுச் செல்பவர்களின் விகிதாரசாரம் எவ்வளவு என்பதையும்;

(ii) பாடசாலைகளை விட்டுச் செல்பவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு என்பதையும்;

(iii) தரம் 5 இல் பாடசாலைகளை விட்டுச் செல்பவர்களின் விகிதாசாரம் எவ்வளவு என்பதையும்;

(iv) கல்வி பொதுத் தராதரப் பரீட்சையின் பின்னர் பாடசாலைகளை விட்டுச் செல்பவர்களின் விகிதாசாரம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) சிங்கள மொழி மூல, தமிழ் மொழி மூல மாணவர்களுக்கிடையில் பாடசாலை விட்டுச் செல்பவர்களின் விகிதாசாரம் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இலங்கையில் பிள்ளைகள் பாடசாலைகளை விட்டுச் செல்வதற்கான காரணங்கள் என்ன என்பதையும்;

(ii) இலங்கையில் பிள்ளைகள் பாடசாலை வருவதை ஊக்குவிப்பதற்காக தற்போது நடைமுறையில் இருக்கும் வேலைத்திட்டங்கள் எவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், என்?

1552/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின் வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நுரைச்சோலை அனல் மின் நிலைய கருத்திட்ட நிர்மாணப்பணிகள் முடிவுற்ற போது உள்ளவாறு ஊழியர் செலவை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) நுரைச்சோலை அனல் மின் நிலைய நிர்மாணக் கருத்திட்டத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்ட வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் உள்நாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(ii) வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு அவர்களை வரவழைத்த நாட்டினால் அல்லது கம்பனியினால் வழங்கப்பட்ட பதவிப் பெயர்களையும்;

(iii) நுரைச்சோலை அனல் மின் நிலைய நிர்மாணக் கருத்திட்டப் பணியாட்கள் சார்பில் வழங்கிய ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஆகியவற்றின் பெறுமதிகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1870/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் இணையத்தளத்தின் ஊடான தொலைபேசி அழைப்புப் பிரிவின் (VOIP) ஒரு நாள் வருமானம் மற்றும் மாதாந்த வருமானம் எவ்வளவு;

(ii) இப்பிரிவு தற்போது மூடப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மூடப்பட்ட திகதி யாது;

(iv) இப்பிரிவை மூடுவதற்கான காரணங்கள் யாவை;

(v) மூடும் சந்தர்ப்பத்தில் இப்பிரிவு பெற்ற இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2091/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது ஸ்ரீ லங்கன் விமான சேவை வெற்றிகரமாக செயற்படுகின்றதா;

(ii) 2005 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இவ்விமான சேவை வெற்றிகரமான செயற்பாட்டைக் காட்டியுள்ளதா;

(iii) மேற்படி காலப்பகுதியில் ஸ்ரீ லங்கன் விமான சேவை பெற்றுக்கொண்டுள்ள முன்னேற்றம் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2012 ஏப்பிரல் 18, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0768/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2006 முதல் 2010 வரையிலான காலப்பகுதியில் உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மாணவர்களது எண்ணிக்கையை நாடுகள் மற்றும் வருடவாரியாக வெவ்வேறாகவும்;

(ii) அவர்கள் எந்தெந்த கற்கைநெறிகளுக்கு அனுமதிக்கப்பட்டார்கள் என்பதையும்;

(iii) மேற்படி மாணவர்கள் மூலம் இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற அந்நியச் செலாவணியை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாகவும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு மேலும் அதிகளவு மாணவர்களை ஈர்க்க மாற்று நிகழ்ச்சித்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படுமா என்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு மாணவர்கள் அனுமதிக்கப்படுவதன் காரணமாக வாய்ப்பை இழக்கும் உள்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கையையும்;

(ii) இப்பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்படும் என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1120/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தர்மாச்சார்ய பரீட்சையில் சித்தியடைந்து தற்போது தஹம் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கு அரசாங்க ஆசிரியர் நியமனம் வழங்குதல் தொடர்பாக இரண்டு அமைச்சரவை நிருபங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனா என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்களுக்கு 2600 ஆவது சம்புத்த ஜயந்தி ஆண்டுக்குள் அரசாங்க ஆசிரியர் நியமனங்களை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாது?

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1664/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 2011 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் லங்கா சதொச நிறுவனத்தினால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோழி இறைச்சியின் நிறை எவ்வளவு;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ இறைச்சிக்கு இந்தியாவுக்கு செலுத்தப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(iii) இக்கோழி இறைச்சி களஞ்சியப்படுத்தப்பட்ட இடங்கள் யாவை;

(iv) களஞ்சியப்படுத்திய இடங்களிலிருந்து நுகர்வுக்காக கோழி இறைச்சி விநியோகிக்கப்பட்ட திகதி, தொகை மற்றும் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் ஒவ்வொரு களஞ்சியத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாவை;

(v) 2011 ஆம் ஆண்டு யூன் மாதமளவில் குறிப்பிட்ட கோழி இறைச்சித் தொகையில் களஞ்சியங்களில் எஞ்சியிருந்த தொகை எவ்வளவு;

(vi) மேற்படி எஞ்சியிருந்த தொகை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2092/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது விவசாய ஓய்வூதியத்திட்டம் முழுமையாகவே செயலிழந்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2005 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் விவசாய ஓய்வூதியத்திட்டத்தை செயற்படுத்த செலவு செய்யப்பட்ட தொகை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(ii) விவசாய ஓய்வூதியத்திட்டத்தை வலுவூட்ட மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2107/ '11

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது நடைமுறையிலிருக்கும் தமிழ்மொழி மூலம் மாத்திரம் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெருந்தோட்டங்களைச் சாராத பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கிணங்க வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கிடையில் இருக்கும் தேசிய பாடசாலைகள், மாகாண பாடசாலைகள், நவோத்யா பாடசாலைகள் மற்றும் இசுரு பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 1000 இரண்டாம் நிலைப் பாடசாலைகள் திட்டத்தில் அடங்கும் பெருந்தோட்டத்தைச் சாராத தமிழ் மொழிமூலப் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளின் பெயர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது இயங்கும் அரச தமிழ் பாடசாலைகளில் பாடசாலைகளை விட்டு விலகிச் செல்லும் மாணவர்களின் விகிதாசாரம் எவ்வளவு என்பதையும்;

(ii) கடந்த 5 வருடங்களினுள் மூடப்பட்ட அரச தமிழ்ப் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

1553/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத விவகாரங்களுக்கான அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப புனர்நிர்மாணம் மற்றும் திருத்தக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதியையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்ட திகதியையும்;

(iii) உத்தேச மொத்த செலவினத்தையும் கருத்திட்டம் நிறைவடைந்த வேளை ஏற்பட்டிருந்த உண்மையான செலவினத்தையும்;

(iv) இக் கருத்திட்டத்திற்கான ஊழியச் செலவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப புனர்நிர்மாணம் மற்றும் திருத்தக் கருத்திட்டத்தில் பணியாற்றிய வெளிநாட்டுப் பணியாட்கள் மற்றும் உள்நாட்டுப் பணியாட்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(ii) வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு அவர்களை வரவழைத்த நாட்டினால் அல்லது கம்பனியினால் வழங்கப்பட்ட பதவிப் பெயர்களையும்;

(iii) மேற்படி கருத்திட்டப் பணியாட்கள் சார்பில் வழங்கிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றின் பெறுமதிகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1635/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கமநல சேவைகள், வன சீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இரத்தினபுரி மாவட்டத்தின் திபொல்கெட்டிய கமநல சேவைகள் நிலையத்தினால் நிருவகிக்கப்படுகின்ற 'பனஹடுவ' குளத்தின் நீர் வெளியேறும் மடை நிலத்தில் அமிழ்ந்துள்ளமையால் சுமார் அறுபது ஏக்கர் நெற்காணி அழிவுறும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதால் பிரதேசத்தின் விவசாயிகள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி குளத்தின் நீர் வெளியேறும் மடையை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1871/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத் தொடர்புகள், தகவல் தொழில் நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண ரெலிகொம் கட்டிடத்தை புனரமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

(ii) இக் கட்டிடத்தை புனரமைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டிருப்பின் இதற்காக விண்ணப்பித்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iii) கேள்விப் பத்திரங்களின் பிரகாரம் ஆகக்குறைந்த விலை மனுக்களின் கீழ் விண்ணப்பித்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iv) மேற்படி கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட நபரின் அல்லது நிறுவனத்தின் பெயர் மற்றும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட பணத் தொகை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது இக்கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்துள்ளதா;

(ii) அவ்வாறாயின் இதற்கு செலவாகிய முழுச் செலவினம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2093/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தற்போதைய காட்டு யானைகளின் தொகை யாது;

(ii) காட்டு யானைகளைப் பேணிப்பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) மேற்படி நடவடிக்கைகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகள் யாவை;

(iv) காட்டு யானைகளைப் பேணிப்பாதுகாப்பதற்காக 2005 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2113/ '11

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையிலுள்ள வீதிச் சிறார்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மஹிந்த சிந்தனை தொலைநோக்கின் பிரகாரம்,

(i) அனைத்து சிறுவர்களினதும் பாதுகாப்பையும் பேணலையும் உறுதிப்படுத்துவதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்ததாக பொலிஸ் சிறுவர் பணியகமொன்று தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது தாபிக்கப்பட்டுள்ள மாவட்டம் யாதென்பதையும்;

(iii) சிறுவர்களுக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்ட நீதி மன்றக் கட்டமைப்பொன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மஹிந்த சிந்தனை தொலைநோக்கின் பிரகாரம் ஐந்து வயது வரையான சிறுவர்களுக்கான பால் கொள்வனவு செய்வதற்காக மாதாந்தம் வழங்கப்படும் ரூபா 200/= க்குப் பதிலாக தற்போது ரூபா 60/= கொடுப்பனவொன்று வழங்கப்படுகிறதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், குறித்த கொடுப்பனவை வழங்குவதற்கு ஆரம்பித்த ஆண்டு யாதென்பதையும்;

(iii) இதன் மூலம் பயன்பெறுகின்ற சிறுவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) (i) மஹிந்த சிந்தனை தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் போசணைப் பொதிக்கு மேலதிகமாக சமுர்த்தி பெறும் தாய்மார்கள் குழந்தையொன்றைப் பெற்றெடுக்கும்போது குழந்தைக்குத் தேவையான பொருட்களடங்கிய பரிசுப் பொதியொன்று வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி பரிசுப்பொதி கிடைக்கப்பெற்றுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1554/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விகாரமகாதேவி பூங்காவிற்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சீன கலாசார நிலையம், கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பிரதமராகப் பதவி வகித்த 2002- 2004 வரையான காலப்பகுதியில் சீன அரசாங்கத்திடமிருந்து இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைத்த ஒரு நன்கொடையா என்பதையும்;

(ii) அது ஒரு தடங்கல்கள் அற்ற நன்கொடையா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சீன கலாசார நிலைய நிர்மாணத்தின் ஆரம்பத் திகதி மற்றும் முடிவுத் திகதி ஆகியவற்றையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்ட மொத்தச் செலவு மற்றும் அது முடிவுறும் வேளையில் இறுதிச்செலவு ஆகியவற்றையும்;

(iii) ஊழியத்துக்காகச் செலவுசெய்யப்பட்ட செலவினத்தையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) இக்கருத்திட்டத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(ii) மேற்படி கருத்திட்டத்துக்காக கம்பனி அல்லது நாடு ஒன்றினால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட பதவிப்பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) சீன கலாசார நிலைய நிர்மாணக் கருத்திட்டத்தின் தொழிலாளர்கள் சார்பாகச் செலுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஆகியவற்றின் பெறுமதிக களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1636/ '11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுனாமியால் அழிவடைந்த காலி மகமோதரை மருத்துவமனையை மீளக் கட்டியெழுப்புவதற்காக ரூபா 3000 மில்லியன் வெளிநாட்டு உதவித் தொகையொன்று கிடைத்து ஐந்து ஆண்டுகளுக்கும் மேல் கடந்துள்ளதென்பதையும்;

(ii) இதுவரை அதன் நிர்மாணப் பணிகள் அத்திவாரத்துக்கு மாத்திரம் மட்டுப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இந்த மருத்துவமனையை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தகாரருக்கு அரசினால் வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மருத்துவமனையை நிர்மாணிப்பதற்காக ரூபா 3000 மில்லியன் தொகையை வழங்கிய நாடு யாதென்பதையும்;

(ii) ஒப்பந்தகாரர் மேற்படி தொகையைப் பெற்றுக்கொண்டு மருத்துவமனைக் கட்டடத்தை நிர்மாணிக்காமை தொடர்பாக ஆராயும் பொருட்டு சுகாதார அமைச்சினால் ஏதேனும் விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன் பெறுபேறு யாதென்பதையும்;

(iv) விசாரணை மேற்கொள்ளப்படவில்லையெனின், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மீண்டும் வெளிநாட்டுக் கடனைப் பெற்று இதன் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கான ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக் கடன்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அக்கடன் தொகையைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனம் மற்றும் நாடு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1902/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்தற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நிர்வாணமாக நடமாடக்கூடிய கடற்கரைகளை ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(ii) நிர்வாணமாக நடமாடக்கூடிய கடற்கரைகள் ஏற்படுத்தப்படுமாயின் அதற்கென ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கடற்கரைகள் யாவை;

(iii) நிர்வாணமாக நடமாடக்கூடிய கடற்கரைகளை ஏற்படுத்துவதற்கான காரணங்கள் யாவை;

(iv) மேற்படி கடற்கரைகளை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நலன்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2094/ '11

கௌரவ சஜித் பிரேமதாஸ,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியை இலங்கைக்குப் பெற்றுக்கொள்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நடவடிக்கை தொடர்பாகவும் செலவிடப்பட்ட பணத் தொகை தனித் தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிதி ஏற்பாடுகள் எத்தகைய முறையில் பெறப்பட்டன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன் ?

# 2012 ஏப்பிரல் 19, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0771/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த 6 வருடங்களில், அரசாங்கம் அதன் செயற்பாடுகளுக்கு நிதி வழங்கும் முகமாக கடன் பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) முதலும் வட்டியுமாக 2011, 2012, 2013, 2014, 2015 ஆகிய ஆண்டுகளுக்கான எதிர்வு கூறப்பட்ட மொத்தப் படுகடன் மீள்கொடுப்பனவையும்;

(iii) முதலும் வட்டிச் செலவினமாக 2003, 2004, 2005 ஆகிய ஆண்டுகளுக்கான மொத்தப்படுகடன் மீள்கொடுப்பனவையும்;

(iv) 2008, 2009, 2010 ஆகிய ஆண்டுகளில் எஞ்சிய கொடுப்பனவு பற்றாக்குறையையும்;

(v) 2011, 2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் எஞ்சிய கொடுப்பனவு பற்றாக்குறையை அல்லது தொகையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1157/ '11

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நீதிமன்ற தீர்ப்பொன்றின் அடிப்படையில் லங்கா மெரயின் சேர்விஸ் நிறுவனத்தின் பங்குகள் அரசுக்கு கையளிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனம் தற்பொழுது என்ன பெயரில் பேணிவரப்படுகின்றது என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்துக்குச் சொந்தமான பங்குகள் தற்பொழுது வேறு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்:

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்துக்கு வருகை தரும் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்குவதற்காக நிருமாணிக்கப்பட்டு வரும் எண்ணெய்த் தாங்கிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி எண்ணெய்த் தாங்கிகளை வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ குத்தகைக்கு வழங்கும் திட்டமேதும் உண்டா என்பதையும்;

(iii) ஆமெனில், குத்தகைக்கு வழங்க எதிர்பார்த்துள்ள நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1666/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி,திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் வசமுள்ள தற்போதைய தங்க ஒதுக்கம் எவ்வளவென்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் வசமிருந்த தங்க ஒதுக்கத்தின் அளவு வருடாந்த ரீதியில் தனித் தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) 2011 ஆம் ஆண்டில் இருந்த தங்க ஒதுக்கத்தில் ஒரு பகுதி விற்கப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில், விற்கப்பட்டுள்ள தங்கத்தின் அளவு யாதென்பதையும்;

(v) அவ்வாறு தங்கத்தை விற்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி தங்கத்தை கொள்வனவு செய்த நாடு அல்லது நபர்கள் யாரென்பதையும்;

(vii) தங்கத்தை விற்று பெற்ற பணத் தொகை யாதென்பதையும்;

(viii)மேற்படி பணம் எத்தகைய பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2095/ '11

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் 30 வருட காலமாக நடைபெற்ற யுத்தத்தை முடிவுறுத்துவதற்கு முப்படையினருக்கு இணையாக இலங்கை பொலிஸாரும் பெரும் பணியாற்றியுள்ளனரென்பதையும்;

(ii) இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களது சம்பளத்துக்கும் முப்படையினரின் சம்பளத்துக்கும் இடையில் வேற்றுமை உள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்களுடைய சம்பளத்தை முப்படையில் சமமான பதவிகளை வகிக்கின்ற உத்தியோகத்தர்களின் சம்பளத்துக்கு இணையாக அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1602/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வெளிநாட்டவர்கள் காணிகள் மற்றும் கட்டிடங்களை கொள்வனவு செய்வதற்கு 100% வரி விதிப்பதற்கான சட்டம் எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது என்பதையும்;

(ii) அத்தகைய சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நோக்கத்தையும்;

(iii) மேற்படி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது முதல் இற்றை வரை அதன் ஏற்பாடுகளின் கீழ் வரி செலுத்திய வெளிநாட்டு கம்பனிகளின்/ஆட்களின் எண்ணிக்கையையும்;

(iv) அவர்களால் இற்றை வரை செலுத்தப்பட்ட தொகைகளை வருடவாரியாகவும்;

(v) மேற்படி வரி செலுத்துகையிலிருந்து விலக்களிக்கப்பட்ட வெளிநாட்டு கம்பனிகளின்/ நபர்களின் எண்ணிக்கையையும் அவர்களின் பெயர்களையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1637/ '11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின் அகலவத்த பிரதேசத்தில் மதுராவல சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பிரிவிலுள்ள நிவுசெட்டல் தோட்ட மருத்துவமனையின் கட்டடங்கள் சிதைவடைந்துள்ளன என்பதையும்;

(ii) மருத்துவமனையை புனரமைப்பதற்காக உத்தியோகத்தர்களால் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) இம்மருத்துவமனையில் அத்தியாவசிய மருந்து வகைகள்கூட இல்லாதுள்ளமையால் பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிலைமையை போக்குவதற்காக மருத்துவமனையை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1903/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கால்டன் விளையாட்டு அலைவரிசையின் (CSN) உரிமை அரசுக்கு அல்லது அரசு சார்பான நிறுவனமொன்றுக்கு உரித்தானதா;

(ii) இந்நிறுவனம் தனியார் நிறுவனமொன்றுக்குச் சொந்தமானதாக இருப்பின் இந்நிறுவனத்தின் உரிமையாளரது அல்லது உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iii) இந் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினரின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கால்டன் விளையாட்டு அலைவரிசையின் ஒலிபரப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி அல்லது ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது;

(ii) மேற்படி அலைவரிசையை ஆரம்பிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள அலை அதிர்வெண் வீச்சிடை ( frequency range) யாது;

(iii) கால்டன் விளையாட்டு அலைவரிசைக்கான ஒலிபரப்பு உரிமை வழங்கப்பட்டுள்ள காலகட்டம் யாது;

(iv) மேற்படி அலைவரிசையை ஆரம்பிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்ட பிரசுர மற்றும் ஒலிபரப்பு உரிமையை வழங்குவதுடன் தொடர்புடைய உடன்படிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அலைவரிசையை ஆரம்பிப்பதற்காக செலுத்தப்பட்ட பணத் தொகை யாது;

(ii) மேற்படி கொடுப்பனவுடன் தொடர்புடைய ஆவணங்களை சமர்ப்பிப்பாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2096/ '11

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் படி இலங்கையில் கால்நடை வளர்ப்பு அபிவிருத்திற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மந்தை வளர்ப்பை அபிவிருத்தி செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள புல் வெளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி புல் வெளிகளின் பரப்பளவு எத்தனை ஏக்கர்களென்பதையும்;

(iii) கிராமிய மட்டத்தின் சிறிய அளவிலான விவசாயிகளுக்கு தமது மாடுகளை வளர்ப்பதற்கு புல் வெளிகளை ஒதுக்கித் தருவாரா என்பதையும்;

(iv) கிராமிய மட்டத்தில் சிறிய அளவில் பசுக்களை வளர்க்கின்ற விவசாயிகளின் நன்மைக்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1638/ '11

கௌரவ புத்திக பத்திரண,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் பிங்கிரிய பிரதேசத்தில், கடுபிலதண்டுவ உயர்வலு மின் விநியோகத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் பல வருடங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி பிரதேசத்தின் கிராமங்களுக்குப் போதியளவு மின்சாரம் கிடைக்காமையால், பிரதேச மக்கள் மிகவும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மின் விநியோகத் திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1705/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகம் முழுவதிலுமுள்ள இலங்கைத் தூதரகங்களின் அல்லது உயர் ஸ்தானிகராலயங்களின் தூதுவர்கள்/உயர் ஸ்தானிகர்களின் பெயர்களை நாடுகளின் அடிப்படையிலும்;

(ii) தனது பொறுப்பு நிலையத்திலிருந்து ஒவ்வொரு உயர் ஸ்தானிகராலும் அல்லது தூதுவராலும் கடமை புரியப்படுகின்ற ஏனைய நாடுகள் ஏதாவது இருப்பின் அவற்றினையும்;

(iii) இராஜதந்திரச் சேவையிலிருந்து நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்களின்/ உயர்ஸ்தானிகர்களின் அனுபவத்தினையும்;

(iv) அரசியல் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்களின்/ உயர்ஸ்தானிகர்களின் அனுபவம் அல்லது தகைமை ஆகியவற்றினையும்;

(v) இலங்கையின் சார்பில் ஒவ்வொரு தூதரகமும் கடந்த 5 வருடங்களில் ஈட்டிய குறிப்பிடத்தக்க அடைவுகளையும்

யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஒவ்வொரு தூதரகத்திலும் அல்லது உயர் ஸ்தானிகராலயத்திலும் இலங்கையிலிருந்து நியமிக்கப்பட்டுள்ள பணியாள் தொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கையினையும்;

(ii) ஒவ்வொரு தூதரகத்திலும் அல்லது உயர் ஸ்தானிகராலயத்திலும் உள்ள மேற்குறிப்பிடப்பட்ட பணியாளர்களுக்கான வருடாந்த செலவினை வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1904/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் இலங்கை விமானப் படைக்கு உலங்கு வானூர்திகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், கொள்வனவு செய்யப்பட்ட உலங்கு வானூர்திகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வகைக்கு அமைய தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி உலங்கு வானூர்தியொன்றை கொள்வனவு செய்வதற்காக செலவாகிய பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) உலங்கு வானூர்திகள் பெற்றுக்கொள்ளப்பட்ட நாடுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி உலங்கு வானூர்திகள் எத்தகைய அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன என்பதையும்;

(ii) கடன் அல்லது கடனுதவி அடிப்படையில் பெறப்பட்டவையாயின் அதை மீளச்செலுத்த வேண்டிய கால எல்லை யாதென்பதையும்;

(iii) மேற்படி கொடுக்கல்வாங்களுடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2097/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1999 ஆம் ஆண்டில் அரசின் முன்னுரிமையான விடயங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் 2005 ஆம் ஆண்டின் வேலையில்லா பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களின் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுடன் கூடிய திட்டவட்டமான ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) மேற்கூறியவாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மொத்த பட்டதாரிகளில், முறைசார்ந்த நடைமுறைக்கேற்ப பதவியுயர்வு பெற்றுக்கொள்வதற்கு இயலுமாயிருந்த பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அரச சேவைக்கு பிரவேசிக்கின்ற அலுவலக பணியாளர் ஒருவருக்குக் கூட பதவிநிலைத் தரத்திற்கு பதவியுயர்வு பெற்று ஓய்வு பெறக்கூடியவாறான செயல் நடைமுறையொன்றைக் கொண்ட அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கும் திட்டவட்டமான நடைமுறையொன்றுடன் கூடிய பதவியுயர்வு வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2012 ஏப்பிரல் 20, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0773/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010.06.29 இல் விநியோகிக்கப்பட்ட நிதி முகாமைத்துவ அறிக்கையின் பிரகாரம் கிரேலைன் இன்நெஷனல் பிரைவேட் லிமிரெற்றிற்கு ரூபா. 400 மில்லியனுக்கான வங்கி உத்தரவாதம் வழங்கப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி அறிக்கையின் பிரகாரம்,

(i) அவ் வங்கி உத்தரவாதம் ஏன் வழங்கப்பட்டது என்பதையும்;

(ii) பிரதி உபகாரமாக கிடைத்த நன்மைகள் என்னவென்பதையும்;

(iii) அப் பொறுப்பு எப்போது விடுவிக்கப்படும் என்பதையும்;

(iv) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (சி.டபிள்யூ.ஈ) அரச வர்த்தக லிமிரெற் அல்லது அரச வர்த்தக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட ரூ. 4200 மில்லியன் வங்கி உத்தரவாதம் ஏன் விடுவிக்கப்படவில்லையென்பதையும்;

(v) மேற்படி உத்தரவாதங்கள் இருப்பதனால் கிடைக்கின்ற நன்மைகள் என்னவென்பதையும்;

(vi) இலங்கை மின்சார சபையை மேலும் கடனுக்கு இட்டுச் செல்லும் இலங்கை மின்சார சபையுடன் தொடர்புடைய கருத்திட்டங்களுக்கு ரூ. 120 பில்லியன் வங்கி உத்தரவாதம் வழங்கப்பட்டதா என்பதையும்;

(vii) இந்நிலைமைய சீர்செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்னவென்பதையும்;

(viii) மக்கள் வங்கியின் ஓய்வூதிய நிதியத்திலிருந்து அரசாங்கத்தினால் பணம் எடுக்கப்பட்டமைக்கான காரணங்கள் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1158/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன கல்வி வலயத்துக்கு உரித்தான முலட்டியன கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிர்வகிக்கப்படும், மாறை/ அதபத்துகந்த கனிஷ்ட கல்லூரியின் ஆசிரியர் விடுதியின் கூரையின் மரந்தடிகள் உக்கி, கதவுகள், யன்னல்கள் மற்றும் சுவர் பெருமளவு பழுதடைந்த நிலைமைக்கு உள்ளாகி உள்ளதென்பதையும்;

(ii) அத்தகையதொரு பழுதடைந்த ஆசிரியர் விடுதி இருப்பது அப்பாடசாலை மாணவர்களின் அலுவல்களுக்கு ஆபத்தானது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆபத்தான நிலையில் காணப்படும் மேற்படி ஆசிரிர் விடுதியை அகற்றிவிட்டு, புதியதோர் ஆசிரியர் விடுதியை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், தற்போது அதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(iv) ஆசிரியர் விடுதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதியையும் ;

(v) நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு உத்தேசித்துள்ள திகதியையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1691/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தபால் திணைக்களம் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுடன் மேற்கொண்டுள்ள சேவை உடன்படிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி உடன்படிக்கைகளை மேற்கோண்டுள்ள நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஏற்படையதாகமேற்கொள்ளப்பட்ட சேவை உடன்படிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் முடிவுற்ற திகதி யாதென்பதையும்;

(v) மேற்படி உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கான அங்கீகாரத்தை வழங்கியவர்கள் யாரென்பதையும்;

(vi) மேற்படி உடன்படிக்கைகளின் கீழ் தபால் திணைக்களத்துக்கு கிடைக்கப் பெறும் இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1639/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பதுளை மாவட்டத்தின் மய்லகஸ்தன்னையில் அமைந்துள்ள, அரச உணவுக் களஞ்சியத் தொகுதியாக பயன்படுத்தப்பட்ட கட்டிடம் மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கட்டிட வளாகத்தில், பெருந்தொகையான அரசாங்க வாகனங்கள் துருப்பிடித்து வருகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேலே குறிப்பிட்டுள்ளவாறு, அரச வளங்கள் அழிவடைவதற்கு இடமளித்தலானது ஒரு தேசிய இழப்பாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி உணவுக் களஞ்சியத் தொகுதி மற்றும் தொடர்புடைய ஏனைய வளங்களை விரைவில் பயனுள்ள நடவடிக்கைகளின் பொருட்டு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1706/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் போக்குவரத்து அமைச்சின் செயற்பாட்டினையும்;

(ii) இந்த அமைச்சில் கடமையாற்றும் பணியாள் தொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கையினையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இன்றுள்ளவாறாக நாட்டில் சேவையிலீடுபடுத்தப்படும் தனியார் பஸ்களின் மொத்த எண்ணிக்கையினையும்;

(ii) உரிய பதிவுடன் சேவையிலீடுபடுத்தப்படும் தனியார் பஸ்களின் எண்ணிக்கையினையும்;

(iii) உரிய பதிவின்றி சேவையிலீடுபடுத்தப்படும் தனியார் பஸ்களின் எண்ணிக்கையினையும்;

(iv) 2000, 2003 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் சேவையிலீடுபடுத்தப்பட்ட தனியார் பஸ்களின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(இ) (i) கடந்த 8 வருட காலத்தின் போது தனியார் பஸ் கட்டணங்கள் எப்போது திருத்தம் செய்யப்பட்டன என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட பஸ் கட்டண அதிகரிப்புகள் யாவை என்பதையும்

அவர் ஆண்டு வாரியாக இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1905/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் காணிகளை அரசாங்கம் சுவீகரித்தல் சம்பந்தமான அதி விசேட வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் மேற்படி வர்த்தமானி வெளியிடப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானியின் பிரகாரம் அரசாங்கம் சுவீகரிக்கவுள்ள காணிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி காணிகளின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் அத்துடன் ஒவ்வொரு காணி உரிமையாளரிடமிருந்தும் சுவீகரிக்கப்படும் நிலத்தின் அளவு தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி காணிகளை அரசாங்கம் சுவீகரிக்கும் வர்த்தமானியை வெளியிடுவதற்கு முன்னர் அக்காணிகளில் இருந்த சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், சேதம் விளைவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மேற்படி சொத்துக்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டதா என்பதையும்;

(v) மேற்படி சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கிய அதிகாரி யாரென்பதையும்;

(vi) அவ்வாறான அனுமதியை வழங்குவதற்கு இவருக்குள்ள தத்துவம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1640/ '11

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) களுத்துறைப் பிரதேசத்தில், கின்கங்கைக்கு குறுக்காக நிர்மாணிக்கப்பட்ட 'நாகொட கெவும் பாலம்' அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு குறுகிய காலப்பகுதியில், பாலத்தின் பாதுகாப்புக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள பக்க அணையில் பிளவு ஏற்பட்டு, சிதைவடைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்காக,

(i) செலவு செய்யப்பட்ட நிதித்தொகை யாது என்பதையும்;

(ii) நிதி வழங்கப்பட்டிருப்பது உள்நாட்டு நிதியங்கள் மூலமா அல்லது வெளிநாட்டு நிதியங்கள் மூலமா என்பதையும்;

(iii) நிதி வழங்கிய நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்காக கையளிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் அல்லது ஒப்பந்தகாரர்கள் யாவர் என்பதையும்;

(ii) நிர்மாணப் பணிகளை மேற்பார்வை செய்த நிறுவனம் யாது என்பதையும்;

(iii) மேற்படி பாலத்தை ஒப்பந்தக்காரர்கள் மூலம் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1707/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மொத்த சனத்தொகையினையும்;

(ii) 18 வயதிற்கு மேற்பட்டோரின் சனத்தொகையினையும்;

(iii) 18 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையினரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) வாக்குரிமை அகற்றப்பட்டவர்களாகவும், கிரமமாக வாக்களிக்க முடியாமலும் அதிகமான வாக்காளர்கள் இருக்கின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) வாக்காளர் இடாப்புக்களின் இற்றைப்படுத்தலை ஒவ்வொரு வருடத்தினதும் யூன் 1 முதல் யூலை 31 வரையான காலப்பகுதிக்கு மட்டுப்படுத்தாமல் அதனை வருடம் முழுவதும் செய்வதற்கு அனுமதிக்கப்படுமா என்பதையும்;

(ii) வாக்களிப்பதை ஒரு கட்டாயமான செயற்பாடாக மாற்றுவது சாத்தியமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1906/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு முதல் இலங்கை கனிப்பொருள்கள் கம்பனியினால் கனிய வளங்களை அகழ்வதற்காக கேள்விப்பத்திரம் வழங்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்;

(i) மேற்படி கம்பனிகளின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கேள்விப் பத்திரம் வழங்குதலை அங்கீகரித்துள்ள அதிகாரி அல்லது அதிகாரிகள் யாரென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கை கனிப்பொருள் கம்பனியின் பணிப்பாளராக பணியாற்றியுள்ளவர்களின் பெயர்கள் முகவரிகள் மற்றும் அப்பதவிக்கான தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) 2009 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை இலங்கை கனிப்பொருள் கம்பனி பெற்றுள்ள இலாபம் அல்லது நட்டம் வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?